**சுருக்கம்**

குத்தகை – மாநகராட்சிகளிலுள்ள சந்தைகள், பேருந்து நிலையங்கள், வாகனம் நிறுத்துமிடங்கள், கட்டணக் கழிப்பிடங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து இனங்களிலும், கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமம் – குத்தகைக்கு விடுதல் – குறித்து 2009–2010 ஆம் ஆண்டு முதல் திருத்திய நடைமுறைகள் – ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை**

**அரசு ஆணை (நிலை) எண்.78** **நாள் : 25.5.09**

**படிக்க :**

1) அரசு ஆணை (நிலை) எண். 181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.9.08
2) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.63463/2008/ஆர்.2, நாள் 19.12.2008

----

**ஆணை :**

முதலாவதாக படிக்கப்பட்ட அரசு ஆணை நிலை எண்.181, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 19.9.08–ல் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளிலுள்ள அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து வருடாந்திர குத்தகை இனங்களிலும், கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமைக்கான குத்தகை கால அளவை தற்போது நடைமுறையிலுள்ள ஓராண்டிற்கு பதிலாக மூன்றாண்டுகளாக, 2009–2010 முதல் அவ்வாணையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு நிர்ணயித்து ஆணை வெளியிடப்பட்டது.

2) நகராட்சி நிர்வாக இயக்குநர் தமது கடிதத்தில், நகராட்சி மற்றும் பேரூராட்சிகளிலுள்ள அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், மிதிவண்டி நிறுத்தங்கள், கட்டணக் கழிப்பிடங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து வருடாந்திர குத்தகை இனங்களிலும், கட்டணங்கள் வசூலிப்பதற்கான உரிமைக்கான குத்தகை கால அளவை ஓராண்டிலிருந்து 2009–2010 முதல் (சில நிபந்தனைகளுக்குட்பட்டு) மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை ஏலம் விட பேரூராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்கு ஆணை வழங்கியது போல் அனைத்து மாநகராட்சிகளுக்கும் மேற்படி ஆணையை நீட்டித்து ஆணை வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

**3)** நகராட்சி நிர்வாக இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு கவனமுடன் பரிசீலனை செய்து, அக்கருத்துருவை ஏற்கலாம் என முடிவு செய்து, ஏற்கனவே நகராட்சிகளுக்கும் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும் வகையில் அரசாணை (நிலை) எண்.181, நாள் 19.9.2008–ல் வெளியிடப்பட்டுள்ள ஆணைகளின் அடிப்படையில் மாநகராட்சிகளிலுள்ள அங்காடிகள், பேருந்து நிலையங்கள், சந்தைகள், மிதிவண்டி நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள் மற்றும் தங்கும் விடுதிகள் போன்ற அனைத்து இனங்களிலும் கட்டணங்கள் வசூலிக்கும் உரிமைக்கான குத்தகை கால அளவை கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, ஏற்கெனவே நடைமுறையிலுள்ள ஓராண்டிலிருந்து மூன்றாண்டுகளாக மாற்றியமைத்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாணை 2009–2010 ஆம் ஆண்டு முதலான குத்தகை இனங்களுக்கு மட்டுமே பொருந்தும் எனவும், நடைமுறையிலுள்ள குத்தகை இனங்களுக்கு பொருந்தாது. ஏற்கனவே நடைமுறையில் உள்ள குத்தகைகளைப் பொறுத்த மட்டில் அத்தகைய குத்தகைகளுக்கான பத்திரங்களில் உள்ள நிபந்தனைகளே பொருந்தும். அத்தகைய இனங்களுக்கான குத்தகைக்காலம் முடிவுபெற்ற பின்னரே, மாற்றியமைக்கப்படவுள்ள குத்தகை நிபந்தனைகள் பொருந்தும் என்ற நிபந்தனைக்குட்பட்டும் அரசு ஆணையிடுகிறது.

i) ஆரம்பத்தில் ஏலத்தின் மூலம் பெறப்படும் குத்தகை தொகையில் இரண்டாமாண்டில் 5 % குத்தகை தொகை உயர்வும், மூன்றாம் ஆண்டில் முந்தைய ஆண்டின் தொகையில் 5% குத்தகை தொகை உயர்வும், செய்யலாம். உதாரணமாக 5 % குத்தகை உயர்வுத் தொகை கீழ்க்குறிப்பிட்டுள்ளவாறு அமையும்.

ஆரம்ப ஆண்டு குத்தகை தொகை ரூ. 100 என்றால் (ரூபாய் நூறு மட்டும்)

இரண்டாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ. 105 (ரூபாய் நூற்றி ஐந்து மட்டும்)

மூன்றாம் வருடத்திற்கான குத்தகை தொகை ரூ. 110.25 (ரூபாய் நூற்றி பத்து மற்றும் இருபத்து ஐந்து பைசா மட்டும்) ஆக இருக்கும்.

ii)மூன்றாண்டுகளுக்கொரு முறை அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் ஆகிய இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமை பொது ஏலத்தில் விடப்பட வேண்டும்.

iii) மூன்றாண்டு காலஅளவு என்ற ஒரு தொகுப்பு கால அளவிற்குள் கட்டணம் வசூலிக்கும் குத்தகைதாரா் காலமானால், அவர்களின் வாரிசுதாரர்கள் குத்தகைதாரராக அவ்வுரிமத்தை பெறலாம். வாரிசுதாரருக்கு விருப்பம் இல்லையெனில், உரிமை மறு ஏலம் விடப்படும்.

iv) இவைகள் தவிர மாநகராட்சியிலுள்ள அங்காடிகள், பேருந்து நிறுத்தங்கள், சந்தைகள், சைக்கிள் நிறுத்தங்கள், கட்டண கழிப்பிடங்கள், தங்கும் விடுதிகள் போன்ற இனங்களில் கட்டணம் வசூலிக்கும் உரிமைகளை குத்தகைக்கு விடுவதற்காக, எற்கனவே நடைமுறையில் உள்ள அனைத்து நிபந்தனைகளும் தொடரும்.

4) மாநகராட்சி வெளியிடும் ஆண்டுக் குத்தகை அறிவிக்கைகளில் குத்தகை நிபந்தனைகள் மற்றும் வரையறைகளை தக்கவாறு திருத்தியமைப்பதற்காக மாநகராட்சிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர் ஆலோசனை அளிக்க வேண்டும். பல ஆண்டுகளுக்கு முன் வரையறுக்கப்பட்ட குத்தகைப் பத்திர படிவத்தை தற்கால மாற்றங்களுக்கேற்ப திருத்தி அமைக்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5) மேற்சொன்ன நெறிமுறைகளை நகராட்சி நிர்வாக ஆணையர் தவறாது பின்பற்ற வேண்டும் எனவும் இது குறித்து உரிய விதிகளை திருத்தியமைப்பதற்கான செயற்குறிப்பினை நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6) இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண். 23771/Fin(MAWS)09 நாள்:29.4.09–ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**/ ஆளுநரின் ஆணைப்படி /**

**நிரஞ்சன்மார்டி,**
**அரசு செயலாளர்.**

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5.
ஆணையர், அனைத்து மாநகராட்சிகள்(நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக)
அனைத்து நகராட்சிகள் (நகராட்சி நிர்வாக இயக்குநர் மூலமாக)
<u>நகல்:</u>
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
நிதித்துறை, சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2 )துறை , சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரிக் கோப்பு.

**/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /**

**பிரிவு அலுவலர்.**